# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## செய்தி வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 13வது பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற உள்ளது. இப்பட்டமளிப்பு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தரும் தமிழக அரசின் மாண்புமிகு ஆளுநருமான திரு. என்.ஆர். இரவி அவர்கள் கலந்துகொண்டு பட்டங்களை வழங்க உள்ளார்கள். இவ்விழாவிற்குத் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களும் கலந்துகொள்ள உள்ளார்கள்.

இப்பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெறத் தகுதியுடையோர் (முனைவர்பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை, முதுஅறிவியல், இளங்கல்வியியல், கல்வியியல் நிறைஞர் பட்டம்) பட்டம் பெறத் தாமதக் கட்டணத்துடன் விண்ணப்பம் அளிக்க வேண்டிய இறுதி நாள் 27.06.2022 என்று தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களால் 05.06.2022 அன்று நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

மேலும், தற்போது மேற்கண்ட பட்டப்படிப்புகளில் பட்டம் பெறத் தகுதியுடையோர் தாமதக் கட்டணத்துடன் விண்ணப்பம் செய்வதற்கான இறுதி நாள் 15.07.2022 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பட்டப்படிப்புகளில் பட்டம் பெறத் தகுதியுடைய மாணவர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறது. மேலும் விபரங்களுக்கு https: // www. tamil university. ac.in என்ற இணையதளத்தை பார்கவும்,

04/07/2022

பதிவாளர் (பொ)

4/7/22